# புனித பவுல் பங்கின் இணையத்தள பயன்பாட்டிற்கானது

புனித பவுல் பங்கு, எமது பாடசாலைகளுடன் இணைந்த குடும்பங்களையோ அல்லது எமது பங்கின் அங்கத்தினரையோ இனம் கண்டு , தேவைப்படும் பட்சத்தில் அவர்களது உதவியை, சிறுவர் மற்றும் இளையோருக்கான பராமரிப்பு இல்லங்களுக்கு வழங்குவதாக வாக்களித்துள்ளது.

புனித பவுல் பங்கிலும் சிறுவர் நலம்புரி சேவையின் உதவிகளும் அங்கத்துவ குடும்பங்களுக்கு தேவைப்படலாம்.

சிறார்களின் ஆரோக்கியம், வளர்ச்சி பற்றிய கவலைக்கிடமான செய்திகள் பாடசாலையிலிருந்தோ அல்லது அயலவர்கள், மருத்துவர்கள் மற்றும் நலன்விரும்பிகளிடமிருந்து கிடைக்கப்பெறும் பட்சத்தில் சிறார் நலன்புரி சேவை அக் குடும்பங்களை தொடர்புகொள்வர்.

சிறார்கள் தங்கள் வீட்டில் சிரமங்கள் சிக்கல்களை எதிர் கொள்வதாக அறியும் பட்சத்தில், நோர்வேயில் பொதுநல ஊழியர்கள் நலன்புரி சேவையை தொடர்பு கொண்டு தெரியப்படுத்த கடமைப்பட்டுள்ளனர்.

சிறுவர் நலன்புரி சேவைக்கு சிறார் பற்றிய கவலைக்கிடமான செய்தி கிடைக்கப்பெறுமிடத்து, அவர்கள் முதலில் பெற்றோருக்கான வழிகாட்டலூடான நடவடிக்கைகளை அல்லது வேற்று நடவடிக்கைகளை முன்னெடுப்பர். பெரும்பாலான சிறார்களுக்கு உதவிகள் நலம்புரி சேவையினால் வீடுகளிலேயே வழங்கப்படும். சிறார்களை பாதிக்கக்கூடிய மிகத்தீவிரமான செய்திகள் கிடைத்தால் மட்டுமே சிறுவர்களை பராமரிப்பு இல்லங்களுகக் நகர்த்த வேண்டிய அவசியம் ஏற்படும்.

சிறார் பற்றிய கவலைக்கிடமான செய்திகள் கிடைக்கப்பெறுமிடத்து சிறார் நலன்புரி சேவைக்கு தெரியப்படுத்த வேண்டிய காரணங்கள்:

- தீவிர பாதுகாப்பற்ற தன்மை
- கிடைக்கப் பெறவேண்டிய கவனிப்புகளாகிய உணவு, உடை ஆதரவு மற்றும் நண்பர்களிடையேயும் பாடசாலையிலும் நடந்துகொள்ள வேண்டியதற்கான அறிவுரை
- வன்முறை
    - *பெற்றோருக்கிடையிலாக வன்முறை
    - *சிறுவர்கள் தாக்கப்படுதல்
    - *பாலியல் வன்முறை
- போன்றவைகள் பராமரிப்பாளர், பாதுகாவலர் அல்லது ஏனையோரால் ஏற்படுவது
- பராமரிப்பாளர் அல்லது சிறார்கள் போதைப்பொருள் பாவனை
- பாதுகாவலர் அல்லது சிறார்கள் தீவிர மன உழைச்சல்படுதல்

சிறார்களுக்கு பராமரிப்பு இல்லம் தேவைப்படும் பட்சத்தில் சிறார் நலன்புரி சேவை தீவிரமாக ஆராய்ந்து, பாதிக்கப்பட்ட சிறார்களை நன்கு தெரிந்தவர்களிடம் அல்லது அச்சிறார்களின் நலனை மேம்படுத்தக்கூடிய பாதுகாவலரை நியமித்தல் வேண்டும். இது சாத்தியப்படாத பட்சத்தில் பராமரிப்பு இல்ல சேவையை தொடர்புகொண்டு, பொருத்தமான பராமரிப்பாளரை தெரிவு செய்தல் அவசியம்.

மேலதிக விபரங்களுக்கு:
https://www.bufdir.no அல்லது www.lovdata.no
சிறார் மற்றும் பெற்றோருக்கான சட்டம் (barnelova)
சிறார் நலன்புரி சேவைகள் சட்டம் ( barnevernloven)